1973 மார்ச் 31]

உடுக்குறியிடப்படாத வினாக்கள்.

தமிழ் மூலம் கல்வி பயிலும் மாணவர்கள்

46 வினா.—தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நடப்புக் கல்வி ஆண்டில் தமிழ் மூலம் பயிற்றுவிக்கும் வகுப்புகளில் மாணவர்கள் சேர்க்கை விவரம் கல்லூரி வாரியாக எவ்வளவு?

ப. 1972–73-ஆம் ஆண்டில் 20,894 மாணவர்கள் புகுமுக வகுப்புகளிலும் 6,396 மாணவர்கள் பட்ட வகுப்புகளிலும் தமிழ்ப் பயிற்றுமொழி வகுப்புகளில் பயின்றனர். ஒவ்வொரு கல்லூரியிலும் தமிழில் பயின்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

Filarial survey

47 *Q.*—Thiru S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any filarial survey was conducted in Madras, during the calendar year 1972; and

(*b*) if so, the details thereof?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

வேளாண்மை பொறியியல் கூட்டு மையங்கள்

48 வினா.—திரு. எல். பலராமன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேளாண்மை பொறியியல் கூட்டு மையங்கள் மாநிலத்தில் மாவட்ட வாரியாக எத்தனை அமைக்கப்பட்டுள்ளன?

(இ) இவற்றுள் எத்தனை வேலை செய்கின்றன?

@53–63-ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ப. (அ) & (இ) 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7-ம் நாள் இருந்த நிலவரப்படி இம்மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட வேளாண்மை பொறியியல் கூட்டு மையங்களின் எண்ணிக்கையும் அவற்றுள் செயல்படும் மையங்களின் எண்ணிக்கையும் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளன:—

வரிசை எண்.	மாவட்டங்களின் பெயர்.	பதிவு செய்யப் பட்ட மையங்களின் எண்ணிக்கை.	அவற்றுள் செயல்படும் மையங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1.	செங்கற்பட்டு	6	2
2.	வடஆற்காடு	12	4
3.	தென் ஆற்காடு	17	9
4.	திருச்சிராப்பள்ளி	13	7
5.	மதுரை	28	23
6	சேலம்	24	5
7.	தர்மபுரி	6	3
8.	நீலகிரி	இல்லை	இல்லை
9.	தஞ்சாவூர்	10	3
10.	கோயம்புத்தூர்	8	1
11.	ராமநாதபுரம்	23	15
12.	திருநெல்வேலி	18	5
13.	கன்யாகுமரி	இல்லை	இல்லை
	மொத்தம் ..	165	77

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Purchase of timber for Tamil Nadu Housing Board

49 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Housing Board has been purchasing its requirements of timber from private parties for past three years;

(*b*) if so, the total quantity purchased; and

(*c*) the amount paid to them for 1972 calendar year?

1973 மார்ச் 31]

A.—(*a*) Yes.

(*b*) 1970 ... Nil.
1971 ... 5743 Cft. Country Wood
2855 Cft. Teak Wood.
1972 ... 380 Cft. Teak Wood.

(*c*) Rs. 6,500 towards the cost of 256 Cft. out of the 380 Cft. purchased.

Anamallais Wild Life Sanctuary

50 *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) the details of the Anamalais Wild Life Sanctuary to be set up in Coimbatore District; and

(*b*) the cost of this project?

ப.—(அ) கோவை மாவட்டத்தில் ஆனைமலைக் குன்றுகளின் பகுதியில், ஆனைமலை வன விலங்கு உய்விடம் என்ற புதிய வன விலங்கு உய்விடம், 21—1—1973-இல் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனைமலை வன விலங்கு உய்விடத்தின் மொத்தப் பரப்பளவு 370 சதுர மைல்களாகும். ஆனைமலைக் குன்றுகளும், அக்குன்றுகளின் எல்லை ஓரத்தில் சமவெளிப் பகுதியில் உள்ள காடுகளும் இதில் அடங்கும். ஆனைமலைக் குன்றுகள், கோவை மாவட்டத்தின் தெற்கு எல்லைப் பகுதியில் விரிந்தும், பொதுவாக, வடமேற்கிலிருந்தும் தென் கிழக்குத் திசை நோக்கியும், 2,500 அடியிலிருந்து 8,000 அடிக்கு மேல் உயரமும் உள்ளவை. பூஞச்சி சரகத்தில் உள்ள குன்றுப் பகுதியின் செழிப்பான பசுமைக் காடுகளும், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி சரகங்களின் சமவெளி முட்காடுகளும் இப்பகுதியில் உள்ளன. இக் காடுகள், வன விலங்குகள் வாழ்வதற்கேற்ற சூழ்நிலைகளுள்ள ஒரு சிறந்த உய்விடமாகத் திகழ்கிறது. தென்னிந்தியாவில் காணப்படும் பல மிருகங்கள் இங்கே உள்ளன. துனக்கடவு, பொள்ளாச்சி, பூஞச்சி மற்றும் உடுமலைப்பேட்டை சரகங்கள் இந்த உய்விடத்தின் பரப்பில் அடங்கும்.

யானை, காட்டெருமை, புலி, சிறுத்தை, காட்டுப் பன்றி, மான், கரடி, காட்டு நாய், முள்ளம்பன்றி, முயல், பறக்கும் அணில், பெரிய அணில், நரி, சிங்கவால் குரங்கு, எறும்பு தின்னி. புனுகுப் பூனை முதலிய வன விலங்குகள் இவ்விடத்தில் காணப்படுகின்றன. மழையில்லாத இலையுதிர்க் காடுகளில், புள்ளிமான், குரைக்கும் மான், காட்டுப்

பன்றி, நரி, முள்ளம் பன்றி, தேன் உண்ணும் கரடி முதலிய வன விலங்குகள் இங்கு சாதாரணமாகக் காணப்படுகின்றன. புலியைவிட சிறுத்தை இங்கு அடிக்கடி காணப்படக்கூடிய ஓர் வன விலங்கு. பூஞ்சி சரகத்தில் உள்ள குன்றுப் பகுதிகள், பரந்த புல் வெளிகளும், சோலைக் காடுகளும் கொண்டவை. ஐபெக்ஸ் என்று கூறப்படும் நீலகிரி மலை ஆடு காணப்படும் ஒரு சில பகுதிகளில் இதுவும் ஒன்று. உடுமலைப்பேட்டைச் சரகத்தைச் சேர்ந்த மஞ்சம்பட்டி பள்ளத் தாக்கில், வெள்ளை நிறக் காட்டெருமைகள் உள்ளன.

இப்பகுதியில் மனித நடமாட்டம் அதிகமில்லாததால், உய்விடம் ஏற்படுத்துவதற்குரிய சூழ்நிலை இங்கு உள்ளது. ஆனைமலை உய்விட எல்லைக்குள் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அவ்வாறு வசிக்கும் ஒரு சிலரும் மலைவாழ் பழங்குடியினர் தான். மேலும், இவ்வுய்விடத்தின் மேற்கு எல்லையை ஒட்டிக் கேரள அரசால் "உய்விடம்" என அறிவிக்கப்பட்டிருக்கும் தேக்கடிக் காடுகள் உள்ளன. ஆனைமலை உய்விடம், வானவழிகளுடன் இணைக்கப்பட் டிருக்கும் கோவையிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கோவையிலிருந்து உய்விடத்தில் பல பகுதிகளுக்கும் எளிதில் செல்லத் தக்க வகையில் நல்ல சாலைகள் உள்ளன.

(இ) இந்த உய்விடத்தை நிறுவுவதற்கு, 1972–73-ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவு செய்ய ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. 1973–74 ஆம் ஆண்டில் இந்த உய்விடத்தை மேம்படுத்த ரூபாய் 2 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

MR. CHAIRMAN : The notices of privilege motion will be taken up on Monday, since the concerned Minister is not here.

2. அறிவிப்புகள்

(1) பேரவையிலிருந்து செய்தி

MR. CHAIRMAN : I have to announce to the House that I
4–30 பி.ப. have received a message from the Deputy Speaker of the Legislative Assembly transmitting copies of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1973 (L.A. Bill (No. 39 of 1972), as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.